ஏரிக்கு வரத்து வரக்கூடிய வகையிலேயும் அதை அமைத்துத் தர உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளோடு பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலையொட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளதால் வீடுகள் பாதிப்பு.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம், சோழவந்தான், வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலை ஒட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளது. இதனால் ஆற்றில் தண்ணீர் பெருக்கு ஏற்படும்போது அருகில் உள்ள வீடுகள் பாதிக்கப்படுவதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மதுரை மாவட்டம், சோழவந்தான் பேரூராட்சி பராமரிப்பிலுள்ள சாலையான தென்கரை அணுகு சாலை (கி.மீ. 0/0—0/8)-யில் கி.மீ. 0/2-ல் வைகை ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் ஒன்றுள்ளது. 1979 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணிகள் திட்டத்தின் மூலமாக மேற்படி மூழ்கு பாலமும், இப்பாலத்தின் இடது பக்கம் ஆற்றின் கீழ் புறம் சுமார் 31.0 மீட்டர் தடுப்பு சுவருடன் நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்டது. 1982 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் மேற்படி தடுப்புச் சுவர் சுமார் 9.00 மீட்டர் நீளத்திற்கு சரிந்தும் அதற்கடுத்த 22.0 மீட்டர் நீளத்திற்கு முழுவதுமாக சேதமடைந்து விட்டது. அது இதுநாள் வரை சீர்செய்யப்படவில்லை.

2. தடுப்புச் சுவரை சீர்செய்து திரும்பக் கட்டுவதற்கு தோராயமாக ரூ. 1.30 லட்சம் தேவைப்படும் என்றும், இத் தொகையினை சோழவந்தான் பேரூராட்சி செலுத்தினால், இப்பணியை வைப்புப் பணியாக (Deposit work) எடுத்துச் செய்யப்படும் என்று தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி) தெரிவித்துள்ளார்.

1987 நவம்பர் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

3. சோழவந்தான் பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால், தடுப்புச் சுவர் கட்டும் பணிக்காக ஆகும் நிதியை அரசு மானிய உதவி நிதியாக வழங்கவும், வைகை நதியும் அதன் படுகைகளும் பொதுப்பணித் துறையைச் சார்ந்தவையாக இருப்பதால் இவ் வேலையை பொதுப்பணித் துறை மூலம் எடுத்துச் செய்ய மதுரை மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்துள்ளார். இது பற்றி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. சந்திர்சேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே விவர அறிக்கையிலே சோழவந்தான் பேரூராட்சி பாலத்திலே இருக்கின்ற அந்த தடுப்புச் சுவர் 1979-லே ஏற்பட்ட வெள்ளத்தினாலே பாதிக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினாலே மீண்டும் பாதிக்கப்பட்டதனாலே சோழவந்தான் பேரூராட்சியினுடைய நிதியிலிருந்து கட்ட வேண்டும் என்று மதுரை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு அறிக்கைஅனுப்பி வைத்திருக்கின்றார்கள். நான் இங்கே அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக ஒன்றை அறிய விரும்புகிறேன். இப்போது, வெள்ளம் வருகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே அரசு மானியத்திலேயிருந்து இந்த வேலையை மக்களுடைய நல்வாழ்வினைக் கருத்திலே கொண்டு உடனடியாக செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக என் மத்தியிலேயே பல தடவைகள் பேசியிருக்கின்றார்கள். அந்த உணர்வின் அடிப்படையில் என்னுடைய துறையைச் சார்ந்த பொறியாளர்களிடமும் நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்களிடமும் பேசி முடிவெடுத்ததன் விளைவாக நெடுஞ்சாலைத் துறையிலேயே இந்த ஆண்டிலேயே அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம் என்று எனக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே விரைவில் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வேலையை உடனடியாகச் செய்வதாக சொன்னதற்காக அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இப்போது போடப்படுகின்ற மதிப்பீட்டிலிருந்து இன்னும் அந்த தென் பகுதி கரைவரைக்கும் தடுப்புச் சுவர் கட்டுகின்ற திட்டத்தை விரிவுபடுத்திக் கட்டித்தர அரசு முன் வருமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை அந்த இடத்திற்குப் போய் பார்க்கச் சொல்லி, தேவையானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.